Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

20.03.2020 திங்கட்கிழமை தொடர்புக்கு 076 584 2222

## யாழ்ப்பாணத்தில் 39 பேரின் மாதிரிகள் இன்று சோதனைக்கு

*யாழ்ப்பாணம், ஏப். 20*
*யாழ்ப்பாணம் சுகாதார மருத்துவ அதிகாரி பிரதேசத்துக்கு உட்பட்ட 39 பேரின் மாதிரிகள் கொரோனா தொற்றுச்*

2

## யாழில் இன்னமும் அபாயம் நீங்கவில்லை

*சத்தியமூர்த்தி எச்சரிக்கை*



*யாழ்ப்பாணம், ஏப்.20*
*யாழ்ப்பாணத்தில் ஊரடங்குத் தளர்த்தப்பட்டாலும், அபாயம் நீங்காததால், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மிகவும் அவதானமா*

2




## இன்று மட்டும் 32 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஏப். 20

கொழும்பு 12, வாழைத்தோட்டம், பண்டாரநாயக்க வீதியில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 32 பேர் இன்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்கள் நேற்றிரவு தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தவர்கள் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சிறப்பு மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

2

## ஒரே நாளில் கூடுதல் நோயாளர்கள் பதிவு!!

கொழும்பில் சதமடித்தது கொரோனா!

*கொழும்பு, ஏப். 20*
*இலங்கையில் மார்ச் 11 முதல் இன்று மாலை வரையான காலப் பகுதியில் யாழ்ப்பாணம் உட்பட 15 மாவட்டங்களில் 303 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். இன்று மாத்தி*

2

## ஊரடங்கு தளர்வில் சமூக இடைவெளியை மறந்த மக்கள்

*யாழ்ப்பாணம், ஏப். 20*
*யாழ்ப்பாண மாவட்டத்தில் 26 நாள்களின் பின்னர் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 5 மணிக்குத் தளர்த்தப்பட்டிருந்தது. பொதுமக்கள் கொரோனா தடுப்பு எச்சரிக்கைகளைப் பின்பற்றாமல் செயற்*

2

யாழ். செயலகத்துக்கு வந்த

## நிவாரணம் கட்சிக்கா? நடவடிக்கை நிச்சயம்!

*நாகரிகமற்ற செயல் என்றும் வடக்கு ஆளுநர் தெரிவிப்பு*

*யாழ்ப்பாணம், ஏப். 20*
*யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு நன்கொடையாகக் கிடைத்த உதவிப் பொருள்களை அரசியல் கட்சிக்கு வழங்கியமை நாகரிகமற்ற செயல். இதற்கு நிர்வாக ரீதியில் கண்டிப்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:*
தேர்தல் காலத்தில் இடம்பெறும் நடவடிக்கைகள்

2

## மாவட்டச் செயலகம் இன்று முற்றுகை

*வெளிமாவட்டத்தவர்களால் இந்த நிலைமை*

*யாழ்ப்பாணம், ஏப். 20*
*யாழ்ப்பாண மாவட்டத்தில் 26 நாள்களின் பின்னர் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ள நிலையில், வெளி மாவட்டத்தவர்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தை இன்று காலை முற்றுகையிட்டனர். ஊடரங்குச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ளதால், தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு அவர்கள் முயன்றபோதும், ஆனையிறவுச் சோதனைச் சாவடியில் மறித்து திருப்பி அனுப்பப்பட்டனர். திருப்பி அனுப்பப்பட்ட பொதுமக்கள் யாழ்ப்பாண*

2



## ரஞ்சன் ராமநாயக்க பிணையில் விடுவிப்பு

கொழும்பு, ஏப்.20
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். ஊரடங்கு உத்தரவை மீறியமை மற்றும் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் இவர் கைதுசெய்யப்பட்டு நேற்றுவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் இன்று நுகேகொடை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே பிணையில் செல்லுமாறு உத்தரவிடப்பட்டது.(ஐ)



## வாழைத்தோட்டத்தை முடக்கியது கொரோனா

*இந்தியா சென்றுவந்த பெண்ணே காரணம் என இராணுவத் தளபதி தெரிவிப்பு*

*கொழும்பு, ஏப். 20*
*"கொழும்பு 12 வாழைத்தோட்டம் பொலிஸ் பிரிவில் இன்று மாலை வரை 59 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்தியாவுக்குச் சென்று வந்த குடும்பப்பெண் மூலமாகவே*

2

ஊரடங்குத் தளர்வின் போது

## மக்களின் செயற்பாடு கவலையளிக்கின்றது

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வேதனை*

*யாழ்ப்பாணம், ஏப். 20*
*யாழ்ப்பாணத்தில் நீண்ட நாள்களுக்கு பிற்பாடு ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளமையால், அதிகளவிலான மக்கள் நடமாடுகின்றனர். இந்த ஊரடங்குத் தளர்வின் போது பொது மக்கள் சுகாதார பிரிவினர் வழங்கியுள்ள அறிவுறுத்தல்*

8

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

# இன்று மட்டும் 32

நேற்றிரவு நடத்தப்பட்ட சோதனையில் 32 பேருக்கும் தொற்று இருப்பது இன்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.
அந்தப் பகுதியில் கடந்த 5 நாள்களில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான சுமார் 59 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
கொழும்பு, வாழைத்தோட்டம், பண்டாரநாயக்க வீதியைச் சேர்ந்த 59 வயதான குடும்பப் பெண் கடந்த 15ஆம் திகதி கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டார். அவர் கடந்த பெப்ரவரி 29ஆம் திகதி தனது, கணவர் மற்றும் மூத்த புதல்வருடன் தம்பதிவ யாத்திரைக்கு பயணத்தை மேற்கொண்டிருந்தார்.
மார்ச் மாதம் 12ஆம் திகதி இந்தியாவிலிருந்து நாடு திரும்பியிருந்த அவர், பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 15ஆம் திகதி கொழும்பு தேசிய மருத்துவமனையில் சுகவீனமுற்ற நிலையில் சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்து அவருக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது அன்றைய தினமே உறுதிப்படுத்தப்பட்டது.
பெண்ணுக்குத் தொற்று அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் அவரின் வீடு அமைந்துள்ள வாழைத்தோட்டம், பண்டாரநாயக்க வீதியிலுள்ள 58 வீடுகள் தனிமைப்படுத்தலுக்குள்ளாக்கப்பட்டதோடு, அந்தப் பகுதியைச் சேர்ந்த பலர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். பெண்ணுடன் தம்பதிவ யாத்திரைச் சென்று வந்திருந்த அவரது கணவர் மற்றும் மூத்த புதல்வர் மற்றும் வீட்டிலிருந்த இளைய புதல்வருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை பின்னர் உறுதிப்படுத்தப்பட்டது.
நேற்றுமுன்தினம் கொரோனா வைரஸ் ஏற்பட்டிருப்பதாக அடையாளம் காணப்பட்ட 10 பேரில் 6 பேர், தம்பதிவ யாத்திரைச் சென்று திரும்பிய குறித்த பெண்ணின் வீட்டுக்கு முன்னால் வசிக்கும் வீட்டிலுள்ள 2 பேர், அவ்வீட்டுக்கு அடுத்துள்ள வீட்டைச் சேர்ந்த 2 பேர், அவ்வீட்டுக்கு அண்மையிலுள்ள இரு மாடிகளைக் கொண்ட வீட்டி லுள்ள இரு குடும்பங்களைச் சேர்ந்த 2 பேர் என அறிவிக்கப்பட்டது.
இந்தநிலையில், வாழைத்தோட்டம் பகுதியைச் சேர்ந்த குறித்த பெண்ணின் உறவினர்கள் மற்றும் அவரின் வீட்டுக்கு அருகில் வசித்தவர்கள் என மேலும் 17 பேர் நேற்று கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர். இவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில் தொற்றுடன் இனங் காணப்பட்டுள்ளனர்.
இதையடுத்து இவர்களுடன் தொடர்புடைய 200 இற்கும் மேற்பட்டவர்கள் கொழும்பிலுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு நேற்றிரவு அழைத்துச் செல்லப்பட்டனர்.
அவர்களுக்கு நேற்றிரவு நடத்தப்பட்ட சோதனையில் 32 பேருக்குத் தொற்று இருப்பது இன்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஓ,5,22)

## 39 பேரின் மாதிரிகள்...

சோதனைக்காக இன்று காலை எடுக்கப்பட்டுள்ளதாக, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். அரியாலையில் இடம்பெற்ற ஆராதனையில் பங்கேற்றவர்களின் மாதிரிகளே இன்று சோதனைக்காக எடுக்கப்பட்டுள்ளன. (ஓ,5)

## ஒரே நாளில் கூடுதல்...

ரம் 32 கொரோனா நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொழும்பு 12, பண்டாரநாயக்க மாவத்தையில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தவர்களில் இருந்தே இவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.
இலங்கையில் கடந்த ஜனவரி 31 ஆம் திகதி ஒரேநாளில் 21 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். அதன்பின்னர் ஏப்ரல் 14 ஆம் திகதி 15 பேர் இனங்காணப்பட்டனர். அதன்பின்னர் இன்றே ஒரே நாளில் 32 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.
மாவட்ட ரீதியில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை வருமாறு,
கொழும்பு 109, களுத்துறை 45, புத்தளம் 35, கம்பஹா 32, யாழ்ப்பாணம் 16, கண்டி 7, இரத்தினபுரி 5, கேகாலை 3, குருணாகலை 2, மாத்தறை 2, அம்பாறை 2, பதுளை 1, காலி 1, மட்டக்களப்பு 1, வவுனியா 1. (ஓ,5,44,22)

## யாழில் இன்னமும் அபாயம்...

கப் பொதுமக்கள் செயற்பட வேண்டும் என்று யாழ் போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் வைத்தியர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார். யாழ். போதனா மருத்துவமனையில் இன்று காலை நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.
கொரோனோ வைரஸ் தொற்றில் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் ஒருவரும், பலாலி தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருந்தவர்களில் 16 பேருமாக இதுவரையில் 17 பேருக்குத் தொற்று இருப்பது பரிசோதனைகளில் இனம் காணப்பட்டுள்ளது.
தொற்று உறுதிப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தவர்களில் 4 பேர் குணமடைந்தனர். அவர்கள் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டு வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் நால்வரும் அரியாலைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், அவர்களது வீடுகளுக்கே நேற்று அனுப்பி வைக்கப்பட்டனர். தொடர்ந்து 14 நாள்கள் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இதேபோன்று யாழில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்ற மேலும் சிலரும் குணமடைந்து வருகின்றனர். அவர்களும் விரைவில் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.
எனவே ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும், கொரோனோ ஆபத்து நீங்கிவிட்டதாகக் கருத முடியாது. எனவே ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ள நிலையில் சுகாதாரப் பிரிவின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, பொது மக்கள் மிக அவதானமாகச் செயற்பட வேண்டும். அதனூடாகவே தொற்று ஏற்படுவதிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்- என்றார். (சு-20)

## ஊரடங்கு தளர்வில்...

பட்டனர். சமூக இடைவெளி பேணப்படவில்லை. இது ஆபத்தான நிலைமை என்று மருத்துவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.
கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாண மாவட்டம் அதிஉயர் இடர் வலயத்துக்குள் உள்வாங்கப்பட்டதன் காரணமாக கடந்த மாதம் 24ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு நடைமுறைக்கு வந்த ஊரடங்குச் சட்டம் இன்று காலையிலேயே நீக்கப்பட்டது.
ஊரடங்குச் சட்டத்தை யாழ்ப்பாண மாவட்டத்தில் இப்போதைக்கு நீக்க வேண்டாம் என்று மருத்துவத் துறையினர் பரிந்துரைத்தும் அதனை மீறி ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது.
பொதுப்போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இயங்கினாலும் சமூக இடைவெளி பேணப்படவில்லை.
அதேபோன்று வீதிகளில் பயணிக்கும் போதும் சமூக இடைவெளி பேணப்படவில்லை. வர்த்தக நிலையங்கள், மதுபான விற்பனை நிலையங்கள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உள்ளிட்ட எந்தவொரு வியாபார நிலையங்களிலும் சமூக இடைவெளி பேணப்படவில்லை.
ஒரு சில மிகப் பெரிய தனியார் விற்பனை நிலையங்கள் தவிர ஏனைய விற்பனை நிலையங்களில், மக்களுக்கு கைகழுவும் வசதிகள் கூட ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை.
வங்கிகள் உள்ளிட்ட சில இடங்களில் பாதுகாப்புத் தரப்பினர் நின்றிருந்த போதும் சமூக இடைவெளியை உரிய முறையில் பேணமுடியவில்லை. (ஓ,5)

## நிவாரணம் கட்சிக்கா....?

தொடர்பில் அவதானம் தேவை என்பதை அதிகாரிகள் புரிந்திருக்க வேண்டும். இது தொடர்பில் ஏற்கனவே முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அத்தகைய செயற்பாடுகள் தற்போதும் தொடர்கின்றன என்று செய்திகள் வருகின்றன. இது வருத்தமளிக்கின்றது. அரசியலில் நாகரிகம் இருக்க வேண்டும்.
குறித்த விடயம் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. தவிர்க்க முடியாத நிலையில் இவ்வாறு இடம்பெற்றிருப்பின் தயவு தாட்சண்யமின்றி உடன் நடவடிக்கைக்கே பரிந்துரைக்கப்படும். அதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.
அதேநேரம் நான்கு தடவை இவ்வாறு நடைபெற்றது என்பதும் ஆச்சரியம் அளிப்பதாகவே உள்ளது. இந்த நடவடிக்கை தொடருமானால் சமூக ஆர்வலர்கள் மாவட்டச் செயலகத்தில் நம்பிக்கை இழந்து விடுவர். அதற்காகவும் உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேலும் தெரிவித்தார்.
யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஆளுங்கட்சியில் அதிகாரத்துடன் உள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே நன்கொடையாக வழங்கப்பட்ட உதவிப் பொருள்களை அலுவலக அதிகாரிகள் ஊடாகத் திருடி, தனது கட்சியின் ஆதரவாளர்களுக்கு அவற்றை வழங்கிவருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-105)

## மாவட்டச் செயலகம்....

மாவட்டச் செயலகத்தை நேற்றுக் காலை முற்றுகையிட்டனர். சுமார் 300 பேர் வரையில் மாவட்டச் செயலகத்துக்கு வந்திருந்தனர். தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு ஏற்பாடுகளைச் செய்து தருமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.
வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களை அவர்களது மாவட்டச் செயலர்களுடன் கலந்துரையாடி தமக்கு விவரங்களை வழங்குமாறு படைத் தரப்பு யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு அறிவுறுத்தியுள்ளது. பொதுப் போக்குவரத்து மாவட்டத்துக்கு மாவட்டம் இல்லை என்றும், சொந்த வாகனங்களிலேயே அவர்கள் செல்ல வேண்டும் எனவும் பாதுகாப்புத் தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் ஒரே தடவையில் எல்லோரும் செல்ல முடியாது எனவும் பகுதி பகுதியாகவே அவர்களை அனுப்ப முடியும் எனவும் படைத் தரப்பினர் கூறியுள்ளனர். (ஓ,5)

## வாழைத்தோட்டத்தை...

கொரோனா வைரஸ் அந்தப் பகுதி முழுவதும் பரவியுள்ளது. எனவே, அந்தப் பகுதியிலுள்ள அனைவரும் கட்டாயம் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.” இவ்வாறு கொரோனா தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்ரினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.
அவர் மேலும் கூறுகையில்,
"வாழைத்தோட்டம், பண்டாரநாயக்க வீதியில் தொற்றுக்குள்ளாகியவர்களில் இந்தியா சென்று வந்த குறித்த பெண்ணின் கணவரும், இரு மகன்களும், உறவினர்களும், அந்தப் பகுதியின் பக்கத்து வீடுகளில் இருந்தவர்களும் அடங்குகின்றனர். நாங்கள் நடத்தும் சோதனைகளில் தான் இவர்கள் அடையாளம் காணப்பட்டனர். இவர்களில் 10 பேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். வாழைத்தோட்டம், பண்டாரநாயக்க வீதி நெருக்கமான பகுதி. அதனால் தான் அங்கு அதிகமானோர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதையடுத்து அந்தப் பகுதி அதிதீவிர கொரோனா அபாய வலயமாக அறிவிக்கப்பட்டு முடக்கப்பட்டுள்ளது. எவரும் வெளியேயும் உள்ளேயும் செல்ல முடியாது. அங்குள்ளவர்களில் பலர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். எஞ்சியோரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவுள்ளனர்" என்றார். (த-22)

## வெள்ளியிலிருந்து
# யாழிலும் ஊரடங்கு

கொழும்பு, ஏப். 20
யாழ்ப்பாணம் உட்பட ஏனைய 21 மாவட்டங்களில் எதிர்வரும் 24 ஆம் திகதி இரவு 8 மணி தொடக்கம் 27 ஆம் திகதி காலை 5 மணிவரை ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஊரடங்கு வேளையில் விவசாயம், அத்தியாவசிய சேவைகளை முன்னெடுப்பதற்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. இன்று தொடக்கம் 21 மாவட்டங்களிலும் ஊரடங்கு இன்று நீடிக்கப்படும் என்று முன்னரே அறிவிக்கப்பட்ட நிலையில், மேற்கண்ட அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. (த-44)



## அழுத்தங்களை யாரும் பிரயோகிக்க முடியாது

### மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 20
ஒத்திவைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தலை விரைவாக நடத்தவோ அல்லது மீண்டும் ஒத்திவைக்கவோ யாரும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியாதென தேர்தல் ஆணைக்குவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தேர்தல் எப்போது நடக்குமென எல்லோரும் என்னிடம் கேட்கின்றனர். தனி ஒருவனாக அதற்கு என்னால் பதிலைச் சொல்ல முடியாது. ஆணைக்குழு ஒரு பொதுவான முடிவுக்கு வர வேண்டும். அதற்கு முன் சுகாதார, பாது காப்பு தரப்புக்களுடன் பேச வேண்டும். பின்னரே ஒரு ஏகமனதாக முடிவுக்கு வரவேண்டும்.
1983 ஆம் ஆண்டிலிருந்து நான் அரச சேவையில் இருக்கிறேன். இதுவரை எந்த அரசியல் கட்சிக்கோ அல்லது குழுவுக்கோ சார்பாக நான் இருந்ததில்லை. இனிமேலும் இருக்கமாட்டேன். அரசமைப்புக்கு, ஜனநாயகத்துக்கு, மக்களுக்கு சார்பாகவே நான் இருக்கிறேன். நான் மக்களுக்குச் சார்பானவன். மக்கள் தரப்புக்கே நான் சார்பாக இருப்பேன், என்றார் தேர்தல் ஆணைக்குழுத் தலைவர். (ஒ,5)





## ஊரடங்கில் திடீர் மாற்றம்!

# 4 மாவட்டங்களிலும் திங்கள் வரை நீடிப்பு

### உட்செல்வது, வெளிச்செல்வது தடை

கொழும்பு, ஏப். 20
கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் ஊரடங்கு எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 5 மணிவரை ஊரடங்கு நீடிக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. மேற்படி மாவட்டங்களில் ஒரு சில பொலிஸ் பிரிவுகளைத்தவிர ஏனைய பகுதிகளில் ஏப்ரல் 22 ஆம் திகதி ஊரடங்கு தளர்த்தப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே ஊரடங்கு உத்தரவில் திருத்தம் செய்யப்பட்டு திங்கள்வரை நீடிக்கப்பட்டுள்ளது.
அத்துடன், இந்த நான்கு மாவட்டங்களுக்கும் உள்நுழைவதும், அங்கிருந்து வெளியேறுவதும் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. (த22,44)



## தபால் சேவை நாளை ஆரம்பம்

கொழும்பு, ஏப். 20
கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த தபால் சேவை நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இது பற்றிய தகவலை அறிக்கை ஒன்றினூடாக தபால் மா அதிபர் விடுத்துள்ளார். (த)

# அரசியல்வாதியிடம் சென்ற செயலக நன்கொடைகள்

### மாவட்டச் செயலருடன் அமைச்சர் தர்க்கம்

யாழ்ப்பாணம், ஏப். 20
யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு நன்கொடையாளர்கள் வழங்கிய நிவாரணத்தை நாடாளுமன்ற வேட்பாளரிடம் வழங்கிய விடயம் தொடர்பில் மாவட்டச் செயலருடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடும் தர்க்கத்தில் ஈடுபட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்குச் சமூக ஆர்வலர்கள் நன்கொடையாக நிவாரண உதவிகளை வழங்கியிருந்தனர். அவற்றை மாவட்டச் செயலக அதிகாரி ஓர் அரசியல்வாதிக்கு அனுப்பியமை தொடர்பிலேயே இந்தத் தர்க்கம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.
அவ்வாறு அனுப்பியமைக்கு அமைச்சர் கடும் ஆட்சேபனை தெரிவித்தபோது, அவ்வாறு இடம்பெறவில்லை அல்லது தனது சம்மதத்துடன் இடம்பெறவில்லை என்று தெரிவித்து மாவட்டச் செயலர் தப்பித்துக்கொண்டாலும் அமைச்சர் கண்டனத்தைத் தெரிவித்த அதேதினம் மாலையில் முன்னர் போன்று பொருள்கள் அனுப்பி வைத்தமையும் தற்போது கண்டறியப்பட்டுள்ளது.
இதேநேரம் குறித்த விடயம் தேர்தல் ஆணைக்குழுவின் கவனத்துக்கும் ஆதாரபூர்வமாகக் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-105)

## சுகவீனமாக வந்த சிறுமி உயிரிழந்தார்

### வவுனியா மருத்துவமனையில் சம்பவம்

வவுனியா, ஏப். 20
சுகவீனம் காரணமாக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த சிறுமி உயிரிழந்துள்ளார். இறப்புக்குக் காரணம் தெரியாத போதும், கொரோனா தொற்றுக்குரிய பரிசோதனை இடம்பெறவுள்ளது என்று மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் க.நந்தகுமாரன் தெரிவித்தார்.
வவுனியா தேக்கவத்தையைச் சேர்ந்த அயிஸ்டன் சர்மி (வயது 7) என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார்.
நேற்றிரவு அவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மருத்துவமனையில் சேர்க்கப்படும்போதே ஆபத்தான நிலையிலேயே காணப்பட்டார். அவ்வாறு சேர்க்கப்பட்ட சுமார் 3 மணித்தியாலங்களில் அவர் உயிரிழந்துவிட்டார்.
சிறுமி சிகிச்சையளிக்கப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவு தொற்றுநீக்கம் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-110)

# கனடாவில் சூடு 17 பேர் இறப்பு!!

## இன்று அதிகாலை பயங்கரம்

ஒட்டாவா, ஏப்ரல் 20

கனடாவில் இன்று அதிகாலை ஆயுததாரியொருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 17 பேர் உயிரிழந்தனர். பொலிஸாரின் உடையில் வந்த மர்மநபர் இந்தத் தாக்குதலை நடத்தினார். அவரின் பெயர் கபிரியேல் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.







தாக்குதல்தாரி

கனடாவின் வடக்குப் பகுதியில் உள்ள ஸ்கொட்டியா நகரில்தான் இந்தக் கொடுரத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. அவர் மக்களின் வீடுவீடாகச் சென்று தாக்குதலை நடத்தினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் 23 வயதான பெண் பொலிஸ் அதிகாரியான ஹெய்தி ஸ்டீவன்சன் உயிரிழந்துள்ளார். மக்களின் உயிரை காப்பாற்ற தாக்குதல் நடத்தியவரை எதிர்த்து அவர் போராடிய தில் சுட்டுக் கொல்லப்பட்டார். இரண்டு குழந்தைகளுக்கு தாயான ஹெய்டியின் இறப்பு ஒட்டுமொத்தக் கனடாவையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. 1989ஆம் ஆண்டில் நடந்த தனிமனித பைத்தியகார துப்பாக்கிச் சூட்டில் 14 பெண்கள் உயிரிழந்தனர். இதையடுத்து அந்த நாட்டில் துப்பாக்கி கட்டுப்பாட்டுச் சட்டம் இயற்றப்பட்டது. இப்போது கனடாவில் பதிவு செய்யாமல் கைத்துப்பாக்கி வைத்திருப்பது சட்ட விரோதமாகும்.

'ஒரு நாடாக இது போன்ற தருணங்களில் நாம் ஒன்றாக இருப்போம் ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக இருப்போம். நாம் சேர்ந்து பலியான குடும்பங்களுக்கு இரங்கல் தெரிவிப்போம். அவர்களுக்கு உதவுவோம்' என்று கனேடியப் பிரதமர் இரங்கல் தெரிவித்தார். (ம)



## குறைகின்றது கொரோனா

நியூயோர்க், ஏப். 20

நியூயோர்க்கில் கொரோனாவின் தாக்கம் கடந்த மூன்று நாள்களாகக் குறையத் தொடங்கியுள்ளது என்று நியூயோர்க் நகர ஆளுநர் தெரிவித்தார்.

இதுகுறித்து நியூயோர்க் நகர ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது: 'கடந்து மூன்று நாட்களில் கொரோனா பாதிப்பு விகிதம் முந்தைய நாட்களில் இருந்ததை விடக் குறைந்துள்ளது. கொரோனா வைரஸ் பாதிப்புக்கு சிகிச்சை எடுத்துக்கொண்டவர்களின் எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது. கிட்டத்தட்ட நியூயோர்க்கில் 18 ஆயிரம் பேர் கொரோனா சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தனர். அந்த எண்ணிக்கை தற்போது 16 ஆயிரமாகக் குறைந்துள்ளது. இறப்பு விகிதமும் 550க்குக் கீழ் குறைந்துள்ளது' என்றார். (ம)

## ஊரடங்கைத் தளர்த்த இஸ்ரேல் அரசு முடிவு

டெல்அவிவ், ஏப். 20

இஸ்ரேலில் கொரோனா பரவல் விகிதம் குறையத் தொடங்கியுள்ள நிலையில், பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில் தற்போது நடைமுறையில் இருக்கும் ஊரடங்குக் கட்டுப்பாட்டை இன்று முதல் படிப்படியாக தளர்த்துவதாக அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது.

மார்ச் 14ஆம் திகதியன்று இஸ்ரேல் ஊரடங்கைக் கொண்டுவந்தது. அலுவலகம், கல்வி நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டன. மக்கள் தங்கள் வீடுகளில் இருக்க வேண்டும் என்றும் பொது இடங்களில் சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. இந்த நிலையில் ஊரடங்கு கொண்டு வரப்பட்டு ஒரு மாதங்களுக்கு மேலாகியுள்ள நிலையில் தற்போது ஊரடங்கைப் படிப்படியாகத் தளர்த்துகிறது இஸ்ரேல்.

'ஊரடங்கினால் இஸ்ரேலின் பொருளாதாரம் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது. பல நிறுவனங்கள் நிரந்தரமாக மூடப்படும் நிலையை எட்டியுள்ளன. வேலையின்மை 25 சதவீதத்துக்கும் மேலாக உயர்ந்துள்ளது. கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் வெற்றியடைந்துள்ளோம். ஊரடங்கு நடவடிக்கையால்தான் கொரோனாவின் தீவிரம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் பயனாகவே இப்போது நாம் இயல்பு நிலையை நோக்கித் திரும்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிகிறது" என்று இஸ்ரேலின் பிரதமர் தெரிவித்துள்ளார். (ம)



## பணிக்குத் திரும்பிய போரிஸ்!

லண்டன், ஏப். 20

கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்த பிரிட்டனின் பிரதமர் போரிஸ் ஜோன்சன் அரச பணிகளைக் கவனிக்கத் தொடங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு லண்டன் மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்கப்பட்டது. இதையடுத்து போரிஸின் உடல் நிலையில் படிப்படியான முன்னேற்றம் ஏற்பட்டது. தற்போது அவர் தனது அரச பணிகளைக் கவனிக்கத் தொடங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## அமெரிக்கா – கனடா எல்லை மூடப்பட்டது!

ஒட்டாவா, ஏப். 20

அமெரிக்காவில் கொரோனாவின் தாக்கம் உச்சமடைந்ததைத் தொடர்ந்து, அந்த நாட்டுடனான எல்லையை மூடியது கனடா.




இதுகுறித்து கனடா அதிபர் ஜஸ்டின் தெரிவித்ததாவது, 'அமெரிக்கா கனடா இடையேயான எல்லையை இன்னும் அடுத்த 30 நாட்களுக்கு மூட இரு தரப்பும் ஒப்புக் கொண்டுள்ளோம். ஆனால், மருத்துவப் பொருட்களை எல்லை வழியாக எடுத்துச் செல்லத் தடையில்லை' என்றார்.

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு 7 லட்சத்து 38 ஆயிரத்து 913 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 39 ஆயிரத்து 015 பேர் பலியாகியுள்ளனர். கனடாவில் கொரோனா தொற்றுக்கு 33 ஆயிரத்து 383 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 1,470 பேர் பலியாகியுள்ளனர். (ம)

# மலையகத்தில் வழமைக்குத் திரும்பின நாளாந்தச் செயற்பாடுகள்





மலையகம்,ஏப்.20

ஊரடங்குச் சட்டம் இன்று காலை தளர்த்தப்பட்டதையடுத்து மலையகத்தில் நகரங்களிலும், பெருந்தோட்டப்பகுதிகளிலும் நாளாந்த நடவடிக்கைகள் படிப்படியாக வழமைக்குத் திரும்ப ஆரம்பித்தது.

மார்ச் 20 ஆம் திகதி முதல் ஏப்ரல் 19 ஆம் திகதி வரை இலங்கையில் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்தது. இந்த நாள்களின் இடையிடையே 10 மணிநேரம் ஊரடங்கு தளர்த்தப்பட்டது. எனினும், இன்று முதல் தினமும் காலை 5 மணி முதல் இரவு 8 மணிவரை 15 மணிநேரம் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்திலுள்ள அரச நிறுவனங்கள், அத்தியாவசிய சேவைகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள தனியார் நிறுவனங்கள் தமது பணிகளை இன்று முன்னெடுத்தன.

அரச மற்றும் தனியார் துறையினர் பணிகளை ஆரம்பிக்கும்போது சமூக இடைவெளி, ஆளணி பலம் உட்பட பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டிருந்த நடைமுறைகளைப் பின்பற்றும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் உள்ளூராட்சி மன்றங்களின் ஒத்துழைப்புடன் தொற்று நீக்கி தெளிக்கப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டது. பேருந்து தரிப்பிடங்களிலும் தொற்று நீக்கி தெளிக்கப்பட்டிருந்தது. அதேவேளை, அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்யும் மொத்த மற்றும் சில்லறை வியாபார நிலையங்களில் தட்டுப்பாடாக உள்ள பொருள்கள் இன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. (ப)

## நல்லூரில் சமூக இடைவெளி



யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயத்துக்கு நேற்றைய தினம் பக்தர்கள் வரிசையிலேயே அனுமதிக்கப்பட்டனர். (ஒ)

## வவு.பொலிஸ் நிலையத்துக்கு ஒலிபெருக்கிச் சாதனங்கள் கையளிப்பு




வவுனியா,ஏப்.20

உடனுக்குடன் தகவல்களை அறிவித்துக்கொள்ளும் வகையில் வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்துக்கு ஒலி பெருக்கி சாதனங்கள் வழங்கப்பட்டன.

வடமாகாண மூத்த பிரதி பொலிஸ்மா அதிபர் பத்மசிறி முனசிங்கவால் வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மானவடுவிடம் இன்று திங்கட்கிழமை காலை கையளிக்கப்பட்டன. (ஐ-110)



## கொக்கட்டிச்சோலையில் கசிப்பு நிலையம் முற்றுகை

மட்டக்களப்பு, ஏப்.20

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக்கட்டிச்சோலை களப்புப் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று முற்றுகை செய்யப்பட்டு, உற்பத்திப் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதி இளைஞர்களுடன் கொக்கட்டிச் சோலைப் பொலிஸார் இன்று காலை அந்த முற்றுகையை மேற்கொண்டனர். இதன் போது, 6 பரல்களில் அடைக்கப்பட்ட ஆயிரம் லீற்றருக்கு மேற்பட்ட கோடா கைபற்றப் பட்டுள்ளன.

இளைஞர்களின் உதவியோடு அப்பகுதியின் கிராம அலுவலர், அபிவிருத்தி உத்தியோகத்தர், அயல் கிராம அலுவலர் ஆகியோருடன் பொலிஸார் முற்றுகையை மேற்கொண்டனர்.

கைப்பற்றப்பட்ட பொருள்கள் அனைத்தும் கொக்கட்டிச்சோலைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன. கிராமங்களில் உள்ள இளைஞர்கள், சட்ட விரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த ஒத்துழைக்கின்றமை முன்மாதிரியான செயற்பாடு, இது போன்று ஏனைய இளைஞர்களும் முன்வருகின்ற போது சட்டவிரோத செயற்பாடுகளை இலகுவாகக் கட்டுப்படுத்த முடியுமென சமூகச் செயற்பட்டாளர்கள் தெரிவித்தனர். (ப-150)

## நீள் வரிசையில் 'பெருங்குடி' மக்கள்




யாழ்ப்பாணம், ஏப். 20

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீண்ட இடைவெளியின் பின்னர் ஊரடங்கு தளர்த்தப்பட்ட நிலையில் அத்தியாவசிய கடைகளில் மக்கள் பெருமளவில் திரளாத போதிலும் மதுபானசாலைகளில் நீண்ட வரிசையில் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப்பட்ட சகல மதுபானசாலைகளிலும் மதுப்பிரியர்களே அதிகம் நிறைந்திருந்தனர். இதனால் மதுபானசாலைகள் காணப்பட்ட இடங்களில் அதிக சனக் கூட்டம் காணப்பட்டது. இவ்வாறான இடங்களில் பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். சுமார் ஒரு மாத காலத்தின் பின்னர் மதுபான விற்பனை இன்று நடைபெற்றது. சில மதுபானசாலைகளில் விலை குறைந்த மதுபானங்கள் விற்றுத் தீர்ந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-105)



ஊரடங்கு தளர்த்தப்பட்ட பின்னர், இன்று யாழ்ப்பாணம் நகரின் பிரதான வீதிகளில் அதிகளவு வாகன நெரிசல் காணப்பட்டது. (த-105)

# மதுபானசாலைகளிலும் சமூக இடைவெளி

வவுனியா, ஏப்.20

சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய வவுனியாவில் மக்கள் சமூக இடைவெளியைப் பேணி மதுபானங்களை கொள்வனவு செய்தனர்.

கொரோனோ வைரஸ் தாக்கத்தைக் கருத்தில் கொண்டு கடந்த ஒரு மாத காலமாக வடக்கு மாகாணத்தில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட நிலையில் இன்று காலை அது தளர்த்தப்பட்டது. இந் நிலையில் ஒரு மாதகாலத்தின் பின்பாக வடக்கில் மதுபான தநிலையங்கள் இன்றைய தினம் திறக்கப்பட்டிருந்தது. வவுனியா மதுபானசாலை முன்பாக மதுபானங்களைக் கொள்வனவு செய்வதற்காக மதுப் பிரியர்கள் அதிகமாக ஒன்று கூடியிருந்ததுடன், சில மதுபான நிலையங்களில் ஒவ்வொருவருக்கிடையில் சமூக இடைவெளி பேணப்பட்டு மதுபானம் கொள்வனவு செய்யப்பட்டது, இதேவளை நகரின் மதுபான நிலையங்களுக்கு முன்பாக பொலிஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ப-110)



# விவசாயிகளுக்கு உரம் கையளிப்பு

மட்டக்களப்பு,ஏப்.20

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை விவசாய கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கையை மேற்கொண்டு வரும் விவசாயிகளுக்கு மூன்று வகையான உரம் இன்று திங்கட்கிழமை விநியோகிக்கப்பட்டன. வாழைச்சேனை கமநல அபிவிருத்தித் திணைக்கள பிரதேச உத்தியோகத்தர் எம்.ஏ.ரசீட் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் திருமதி. நிஹாரா மௌஜூத், வாழைச்சேனை பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு உரங்களை வழங்கினர்.

(ஐ-150)

# தலதா மாளிகை தொடர்ந்து பூட்டு

கண்டி, ஏப். 20

கண்டி மாவட்டத்தில், ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் தலதா மாளிகை சில நாள்களுக்குப் பூட்டப்பட்டே இருக்கும் என்று தலதா மாளிகையின் தியவனநிலமே பிரதீப் நிலங்க தெல தெரிவித்துள்ளார். வணக்கஸ்தலங்கள் திறக்கப்படுகின்றமை குறித்து, அரசு இதுவரை எவ்வித அறிவிப்பும் விடுக்கவில்லை.எனினும், தலதா-மாளிகையிலுள்ள புத்தரின் புனித சின்னத்துக்கு, தினமும் பூஜைகள் நடத்தப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளதாக, தியவன நிலமே தெரிவித்தார்.(த-114)



# பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.5,000 சமூக நிவாரணம்

## சமூக பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஏப். 20

கொவிட் - 19 தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு சமூக நிவாரணமாக 5 ஆயிரம் ரூபா வழங்குவதற்காக கிராமியக் குழுக்கள் செயற்பட்டு வருவதாக பெண்கள் மற்றும் மகளீர் விவகார சமூக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. அத்தியாவசியப் பொருள்களைத் தொடர்ச்சியாக வழங்குதல், நடவடிக்கை ஒருங்கிணைப்பு, மற்றும் மீளாய்வு என்பவற்றுக்காக ஜனாதிபதி செயலணியின் வழிகாட்டலின் கீழ் பின்வரும் துறையினர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர். முன்பள்ளி ஆசிரியர்கள், தனியார் பேருந்துச் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள், அரச சேவையில் ஈடுபடாத ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்ட வைத்தியர்கள், கைவினைக் கலைஞர்கள், கைத்தறி நெசவுத் தொழிற்துறையினர், நீதிமன்றத்தினூடாக பராமரிப்புக் கொடுப்பனவு பெறும் பெண்கள், வருமானம் இழந்துள்ள சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள், பிர-தேச ஊடக வியலாளர்கள், ஆகியோருக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுமெனவும் அமைச்சு அறிவித்துள்ளது.

# எவரும் எடுத்துச் செல்லலாம் அத்தியாவசியப் பொருள்கள்



கம்பஹா மினுவங்கொடைப் பகுதியில், நபரொருவர், தேவையானவர்கள் எடுத்துச் செல்லலாம் என்று எழுதப்பட்ட வாசகங்களுடன், அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றை தனது வீட்டுக்கு முன்னால் வைத்துள்ளார்.(க)

# கண்காணிப்பு மையம் அமைப்பு

கொழும்பு, ஏப். 20

ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்ட பின்னர் மக்களின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு சிறப்புச் செயற்பாட்டு மையம் நிறுவப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார். தொலைக்காட்சி நிகழ்வு ஒன்றில் அவர் நேற்று இதைத் தெரிவித்துள்ளார். நாடு முழுவதும் நான்கு மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் ஊரடங்கு இன்று தளர்த்தப்பட்டுள்ளது. அதனால் மக்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளது. அதனால் மீண்டும் கொரோனா பரவும் சூழல் நீடிக்காதிருக்க, சிறப்புச் செயற்பாட்டு மையம் அமைக்கப்படவுள்ளது. சமூக இடைவெளி பேணல், முகக்கவசம் அணிதல், சுகாதார நடைமுறைகளைப் பேணல் போன்றன இந்தச் சிறப்புச் செயற்பாட்டு மையம் மூலம் கண்காணிக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (த)

# அத்தியாவசிய சேவையில் 4,700 பஸ்கள்

கொழும்பு, ஏப்.20

ஊரடங்குச்சட்டம் தளர்த்-தப்பட்டுள்ள பகுதிகளில் மாத்திரம் பொதுப் போக்-குவரத்துச் சேவைகளை முன்னெடுக்க சுமார் 4ஆயிரத்து 700 பஸ்கள் பயன்படுத்தவுள்ளதாக பொதுப் போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

எனினும் எதிர்வரும் 22 ஆம் திகதி ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்படவுள்ள கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், கண்டி, கேகாலை, அம்பாறை உள்ளிட்ட மாவட்டங்களில் பொதுப் போக்குவரத்து இடம்பெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஹெரோயினுடன் மூவர் கைது

மட்டக்களப்பு, ஏப்.20

ஹெரோயின் போதைப் பொருளை விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டில் நேற்றையதினம் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வாழைச்சேனைச் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவப் புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து ரிதிதென்னை, பிறைந்துறைச்சேனை, மாஞ்சோலை பதுறியாநகர் ஆகிய பிரதேசங்களில் மேற்கொண்ட நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. இராணுவப் புலனாய்வு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்கள் வாழைச்சேனைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்களும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ரிதிதென்னை பகுதியில் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டார் என்று கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து 7 மில்லி கிராம் ஹெரோயினும், பிறைந்துறைச்சேனை பகுதியில் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டார் என்று கைது செய்யப்பட்ட நபரிடம் இருந்து 5 மில்லி கிராம் ஹெரோயினும், மாஞ்சோலை பதுறியாநகர் பகுதியில்



கைதான நபரிடம் இருந்து 5 மில்லி கிராம் ஹெரோயின் அடங்கலாக மூவரிடம் இருந்து பதினேழு மில்லி கிராம் ஹெரோயினும் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்களுக்கு இன்னும் பல போதைப் பொருள் வியாபாரிகளின் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக வாழைச்சேனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன மேலும் தெரிவித்தார். (ப-150)



# எனது துடுப்புமட்டையில் சந்தேகம் கொண்டார்கள்

## யுவராஜ் பகிர் தகவல்

புதுடெல்லி, ஏப். 20

2007ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண ரி20 தொடரில் 6 பந்துகளில் 6 சிக்சர்களை யுவராஜ் விளாசினார். இந்த அதிரடியை அடுத்து தனது துடுப்பு மட்டையின் தயாரிப்புத் தொடர்பில் உலக வீரர்கள் குறிப்பாக ஆஸ்திரேலியர்கள் சந்தேகம் கொண்டனர் என்று தெரிவித்துள்ளார் யுவராஜ்.

உலகக்கிண்ண நினைவலைகளை மீண்டியுள்ள யுவராஜ் மேலும் தெரிவித்ததாவது:

ஆஸ்திரேலிய பயிற்சியாளர் அப்போது என்னிடம் வந்து என் துடுப்புமட்டையில் பைபர் உள்ளதா என்றார். அது சட்ட பூர்வமானதா? ஆட்ட நடுவருக்குத் தெரியுமா? என்றார். அதனால் நான் அவரிடம் நீங்களே செக் செய்து கொள்ளுங்கள் என்றேன். ஏன் அடம் கில்கிறிஸ் என்னிடம் வந்து துடுப்பு மட்டைகளை யார் தயாரிக்கிறார்கள்? என்றார். ஆட்ட நடுவரும் என் துடுப்புமட்டைகளைப் பரிசோதித்தார். ஆனால் உள்ளபடியே சொல்ல வேண்டுமெனில் எனக்கு அந்தத் துடுப்புமட்டை தனிச் சிறப்பானது. அதேபோல் 2011ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரில் பாவித்த துடுப்பு மட்டையும் தனிச் சிறப்பானது என்றார். (ம)



# டோனி ரோகித் சர்மா சிறந்த தலைவர்கள்

புதுடெல்லி, ஏப். 20

ஐ.பி.எல் தொடரில் டோனி, ரோகித் இருவரும் இணைந்து சிறந்த தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஐ.பி.எல் தொடர் அறிமுகமாகி நேற்றுடன் 12 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. இதை முன்னிட்டு பிலபல இணையத்தளமொன்று ஐ.பி.எல் தொடரில் யார் சிறந்த தலைவர் என்று கேள்வியெழுப்பி இருந்தது. வழங்கப்பட்ட வாக்குகளை அடிப்படையாக வைத்து டோனியும், ரோகித் சர்மாவும் சிறந்த தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

டோனி அனைத்துத் தடவைகளும் சென்னை சுப்பர் கிங்ஸை பிளே ஒவ் சுற்றுக்கு அழைத்துச் சென்றுள்ளார். மூன்று தடவைகள் கிண்ணத்தை வென்று கொடுத்துள்ளார். ரோகித் சர்மா நான்கு தடவைகள் கிண்ணம் வென்று கொடுத்துள்ளார். (ம)

# ரசல் இருந்திருந்தால்...

## கம்பீரின் கற்பனை இது

புதுடெல்லி, ஏப். 20

கொல்கத்தா அணியின் அதிரடி வீரரான ரசல் இருந்திருந்தால், இன்னும் ஓரிரு கிண்ணங்களைக் கூடுதலாக வென்றிருக்கலாம் என்று தெரிவித்துள்ளார் கொல்கத்தா நைட் ரைடர்ஸின் முன்னாள் தலைவரான கம்பீர்.

இது தொடர்பில் கம்பீர் மேலும் தெரிவித்ததாவது:

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அந்ரே ரசலை 50 லட்சம் ரூபாக்கு ஏலம் எடுத்தது. பவன் நெஹியை டெல்லி அணி 8 கோடி ரூபாக்கு ஏலம் எடுத்தது. நீங்களே கற்பனை செய்து பாருங்கள். நான் விளையாடிய ஏழு வருடங்களாக அவர்



கொல்கத்தா அணியில் இருந்திருந்தால், நாங்கள் நிச்சயமாக கூடுதலாக ஒன்று அல்லது இரண்டு கிண்ணங்களை வென்றிருக்க முடியும் - என்றார். (ம)

# ஆஸ்திரேலிய வீரர்கள் ஊதியம் இழப்பார்கள்!

சிட்னி, ஏப். 20

கிரிக்கெட் ஆட்டங்கள் நடைபெறாமல் இருப்பதால் ஆஸ்திரேலிய வீரர்கள் சிலர் ஊதியத்தை இழக்க வாய்ப்புள்ளது என்று மார்க் ரெய்லர் தெரிவித்தார்.

கிரிக்கெட் ஆட்டங்கள் நடைபெறாமல் இருப்பதால் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை பெருமளவு இழப்பைச் சந்தித்துள்ளது. இதனால் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையில் பணிபுரியும் ஊழியர்களின் சம்பளத்தில் 80 வீதம் பிடித்தம் செய்யப்படவுள்ளது. அதேபோல் வீரர்களின் சம்பளத்திலும் பிடித்தம் செய்யப்பட வாய்ப்புள்ளது என்று மார்க் ரெய்லர் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களுக்கு என்று தனியான சபை உள்ளது. அந்தச் சபையுடன் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை பேச்சு நடத்தித்தான் ஏதேனும் முடிவை எட்ட முடியும். எனவே இந்த ஊதியப் பிடித்தத்துக்கு ஆஸ்திரேலிய வீரர்களின் சபை மறுப்புத் தெரிவிக்கும் என்றே கருதப்படுகின்றது. (ம)

# ரெய்னாவை பல தடவைகள் தாங்கியவர் டோனியே!

## சேவாக், கம்பீர் வரிசையில் யுவராஜும் குற்றச்சாட்டு

புதுடெல்லி, ஏப். 20

இந்திய அணிக்குள் ரெய்னா சிலகாலம் ஆதிக்கம் செலுத்தியதற்குக் காரணம் டோனிதான். அவர் ரெய்னாவை தாங்கிப்பிடித்தார் என்று யுவராஜ் குற்றஞ்சாட்டினார்.

யுவராஜ் மேலும் தெரிவித்ததாவது:

சுரேஷ் ரெய்னாவுக்கு அப்போது பெரிய ஆதரவு இருந்தது. காரணம் டோனி அவரை எப்போதும் தாங்கிப்பிடிப்பார். ஒவ்வொரு தலைவருக்கும் பிடித்த வீரர் என்று யாராவது இருப்பார்கள், 2011ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரில் டோனியின் தனித்தெரிவு ரெய்னாதான். யூசுப் பதானும் அப்போது சிறப்பாக விளையாடிவந்தார். நானும் நன்றாக விளையாடினேன். இலக்குகளைக் கைப்பற்றினேன். அப்போது இடது கை சுழல்பந்து வீச்சாளர் அணியில் இல்லை நான் இலக்குகளைக் கைப்பற்றி வந்தேன், அதனால் வேறு வழியில்லை. யூசுப் பதான் நன்றாக விளையாடிய போதிலும் அவர் அநியாயமாக உலகக்கோப்பையில் சில போட்டிகளிலும் அதன் பிறகும் அணியிலிருந்து நீக்கப்பட்டார். அது அவர் கிரிகெட் வாழ்க்கையையே



சூனியமாக்கி விட்டது என்றார்.

யுவராஜ் மட்டுமல்ல கம்பீர், சேவாக் உள்ளிட்ட வீரர்களும் டோனியின் இத்தகைய போக்குகளை அம்பலப்படுத்தியுள்ளனர். (ம)

## சடலம் மீட்பு

மட்டக்களப்பு,ஏப்.20

மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்முனை பாலத்துக்கு அருகில் ஆணின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டது.

ஆரையம்பதியைச் சேர்ந்த 32 வயதுடைய கைலாய பிள்ளை சரண்ராஜ் என்பவரது சடலம் என அடையாளம் காணப்பட்டுள்ளது என்று காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)

## ஈஸ்ரரில் பலியானோருக்கு வீட்டு வாசலில் தீப அஞ்சலி

மட்டக்களப்பு, ஏப்.20

ஈஸ்டர் தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிர்நீத்த உறவுகளுக்கான ஓராண்டு அஞ்சலியினைச் செலுத்தும் வகையில், நாளை மாலை ஆறு மணிக்கு அனைவரின் வீடுகளிலும் வாசல்களில் நினைவுச் சுடரேற்றி அஞ்சலி செலுத்துமாறு மட்டக்களப்பு தமிழ் உணர்வாளர்கள் அமைப்பினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(ப-150)



# தேர்தல் திகதியை அறிவிக்காதீர்கள்

## ஆணைக்குழுவுக்கு ரிஷாத் கடிதம்

கொழும்பு, ஏப்.20

தேர்தல் நடத்தக் கூடிய ஒரு சிறந்த சூழல் ஏற்படும் வரை, தேர்தல் திகதியை அறிவிக்க வேண்டாமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன், தேர்தல் ஆணைக்குழுத் தலைவரிடம் எழுத்துமூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் உள்ளதாவது;

கொவிட் 19 தொற்று எண்ணிக்கை சாதாரண அளவில் இருப்பதாக சிலரால் கூறப்பட்ட போதும், உண்மையில் இந்த நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை இன்னும் மத்திம நிலையிலேயே காணப்படுகின்றது. சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் துறை உட்பட்ட பல்துறை சார்ந்தவர்களால், தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ஊரடங்குச் சட்டம் உறுதியாக நீக்கப்படலாம் என்று தீர்க்கமாக அறிவிக்கப்படும் வரை, பொதுத் தேர்தல் நடைபெறக் கூடிய திகதியானது அறிவிக்கப்படக் கூடாதென்று கோருகின்றேன். இந்த நிலையில் சகல அரசியல் கட்சிகள், அதிகாரிகளுடன் தேர்தல் திகதி தொடர்பில் கலந்துரையாடி, சிறந்த முடிவுகளை மேற்கொள்ளுமாறு சுட்டிக்காட்டுவதோடு, அதுவரையில் தேர்தலுக்கான அறிவிப்புத் திகதியை நிறுத்தி வைக்குமாறும் கோரிக்கை விடுக்கின்றேன்- என்றுள்ளது. (ப)

# கர்ப்பிணிப் பெண்ணுக்கு கொரோனா உறுதி!

கொழும்பு, ஏப்.20

காசல் மகப்பேற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட கர்ப்பிணிப் பெண் ஒருவருக்கு கொரோனா இருப்பது உறுதியானது.

கொழும்பு வாழைத்தோட்டம் பகுதியைச் சேர்ந்த கர்பிணிப் பெண் ஒருவர் காசல் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இதன்போது அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது.

இதனையடுத்து குறித்த கர்ப்பிணிப் பெண் தற்பொழுது முல்லேரியா மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இதனை அடுத்து காசல் மகப்பேற்று மருத்துவமனை தற்காலிகமாக மூடப்பட்டது.

தொற்று நீக்கல் செயற்பாட்டை அடுத்து காசல் மகப்பேற்று மருத்துவமனையின் செயற்பாடுகள் வழமைக்கு திரும்பியுள்ளன. (ஐ)



# அத்தியாவசியப் பொருளுடன் கடத்தப்பட்டது கிருமி நாசினி

## மதவாச்சியில் இருவர் கைது

மதவாச்சி, ஏப். 20

அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் சட்டவிரோதமான முறையில் இரசாயனங்களை நாசினிகளை எடுத்துச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இலங்கை கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படையின் மதவாச்சி பூனேவ வீதிச் சோதனைச்சாவடியில் வைத்து லொறியொன்று சோதனைக்குட்படுத்தப்பட்டது. இதன்போது 160இற்கும் மேற்பட்ட இரசாயன மருந்துப் போத்தல்கள் இருப்பது கண்டறியப்பட்டது. இதனை அடுத்து லொறியின் சாரதி, உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் 31 மற்றும் 37 வயதுடைய கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்று கடற்படை தெரிவித்தது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக சந்தேகநபர்கள் இருவரும் மதவாச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட லொறி, மற்றும், இரசாயன களை நாசிகளும் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது என்று கடற்படையினர் தெரிவித்தனர். (ப-114)

# மக்களின்....

களை கடைப்பிடிக்காதும் தங்களுக்கு இடையே சமூக இடைவெளியையும் பேணாமலும் நடந்து கொள்வது கவலையளிக்கின்றது. இவ்வாறு இலங்கை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் த.காண்டீபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டு உள்ளது. ஆனாலும் நாட்டில் கொரோனா தொற்றும் வாய்ப்புள்ள அசாதாரண நிலை நிலவுவதன் காரணமாக பொதுமக்கள் சுகாதாரத்துறையால் கூறப்படுகின்ற விடயங்களை கடைப்பிடிக்காமை சுகாதாரத்துறையின் அர்ப்பணிப்பான சேவையால் வட மாகாணத்தில் கொரோனா தாக்கத்தைக் கட்டுப்படுத்தி தக்க வைப்பதை இல்லாதொழிக்கும் செயற்பாடுகள் என்று அஞ்சுகின்றோம்.

மக்கள் மதுபானக்கடைகளிலும், புடவைக் கடைகளிலும், நகைக்கடைகளிலும் வரிசையில் நிற்பது கவலையளிக்கின்றது. அத்தியாவசியமான பொருள் கொள்வனவு செய்வதிலும் மக்கள் முண்டியடிக்கிறார்கள். இதனை வட மாகாண ஆளுநர், மாவட்டச் செயலர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சமூக மட்டத்தில் கொரோனாத் தொற்று ஏற்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கான பரிசோதனைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த சூழ்நிலையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்தாலும் அத்தியாவசியத் தேவைகளுக்காக வெளியே வருபவர்கள் கட்டாயமாக சமூக இடைவெளியைப் பேண வேண்டும். அலுவலகங்கள் அல்லது நிறுவனங்களில் மக்கள் பலர் கூடக்கூடிய இடங்களில் பொருத்தமான, தனிநபர்களுக்கிடையிலான சமூக இடைவெளியைப் பேணுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

கொரோனா நோயானது 80 சதவீதமான தொற்றுள்ளவர்களில் குறைந்த அறிகுறிகளுடன் மட்டுமே வெளிப்படுத்தப்படும் என்பதாலும், 70 சதவீதம் மட்டுமே பிசிஆர் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்படும் என்பதாலும் சமூகத்தில் நீங்கள் பழகுபவர்களில் இருந்து தொற்று ஏற்படலாம் என்பதை ஞாபகத்தில் வைத்திருக்கவும். மக்கள் கொரோனாவை கட்டுப்படுத்த இதுவரை காலம் அளித்த ஒத்துழைப்பை இந்த ஊரடங்கு நீக்கிய காலத்தில் அளிக்க வேண்டும் என்று தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்- என்றுள்ளது. (ஓ,5)

# கர்ப்பிணிகள் உட்பட இலங்கையர் அழைக்கப்படுவர்

கொழும்பு, ஏப். 20

குழந்தைப்பேறு சம்பந்தமாக இந்தியா சென்று கொரோனாவால் நிர்க்கதிக்குள்ளாகிய 15 பேரைவிரைவில் நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று ஜனாதிபதி செயலகம் தெரிவிக்கிறது. இந்தியா, கோயம்புத்தூர் பகுதிக்கு 4 மாதங்களுக்கு முன் 6 கர்ப்பிணிகள் உட்பட 15 பேர் சென்றிருந்தனர். கொரோனாவால் இந்தியா முழுமையாக முடக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களால் நாடு திரும்ப முடியவில்லை என்று குறிப்பி டப்படுகின்றது. (த)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 20.04.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.